Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-IV

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | மார்கழி-23 | 07-01-2005 | வெள்ளிக்கிழமை | ஓசை -324

S.M கோல்ட் ஹவுஸ்



வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள

S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.

T.P: 024-222 4247 (சி-11120)

### சுனாமி பேரலை அனர்த்த மீட்புப் பணி மூலம்

# புலிகள் தனி அரசுக்குரிய நிர்வாகக் கட்டமைப்பு தம்மிடம் உள்ளதென்பதை நிரூபித்துள்ளனர்

## வோஷிங்டன் ரைம்ஸில் புகழாரம்

**விடுதலைப் புலிகளினது மீட்புப் பணி நடவடிக்கைகள் அவர்களது கட்டுக்கோப்பான நிர்வாகத் திறமையை எடுத்துக்காட்டியது மட்டுமல்லாமல், இவ்வாறான சிரமம்மிக்க ஒரு பணியினை மிகவும் நேர்த்தியாகவும் நிதானமாகவும் கையாண்ட முறைகள் அவர்களது தனிநாட்டுக் கோரிக்கைக்கு முன்னோடியாக ஓர் நிர்வாகக் கட்டமைப்பு இருப்பதனை உலகிற்கு நிரூபித்துள்ளது என வோஷிங்டன் ரைம்ஸ் பத்திரிகைக்கு ஏ.பி. செய்தியாளர் ஆதர் மக்ஸ் எழுதிய கட்டுரையில் தெரிவித்துள்ளார்.**

இக்கட்டுரையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

தமிழீழத்தை பேரலைகள் தாக்கிய சில நிமிட நேரத்திலேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் படையணிகள் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு விரைந்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டதை வியந்து, பாராட்டியுள்ளார்.

போராளிகளின் ஒருபகுதியினர் வீதித் தடைகளை ஏற்படுத்திக் காயப்பட்டவர்களை உடனுக்குடன் வைத்தியசாலைகளுக்கு விரைவாக அனுப்புவதற்கான வாகன வசதிகளை ஏற்படுத்திக் கொண்டிருக்க, இன்னொரு பகுதியினர் காயப்பட்டவர்களுக்குத் தேவையான இரத்ததானம் பெறுவதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டனர்.

வேறொரு பகுதியினர், இறந்தவர்களை அடையாளம் காண்பதற்கு வசதியாக உடனுக்குடன் புகைப்படம் எடுத்ததுடன், அவர்களை அடக்கம் செய்வதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டனர்

இவ் அனர்த்தங்களின் முதல் நாள் அன்றே அகதி முகாம்கள் மற்றும் நிவாரணப்

( IV ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா செயலர் கொபி அனான் மட்டக்களப்பிற்கு நாளை விஜயம்!

இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கொபிஅனான் நாளை மாலை மட்டக்களப்பிற்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் வே.சண்முகம் தலைமையில் நடைபெறவுள்ள உயர்மட்ட மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள கொபிஅனான் சுனாமி தாக்குதலினால் பாரிய அழிவுகளைச் சந்தித்துள்ள நாவலடி புதுமுகத்துவாரம் புதிய காத்தன் குடி பாலமுனை போன்ற பகுதிகளுக்கு நேரடியாக விஜயம் செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

( IV ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை நகர மீட்புப்பணியின் 2ஆவது கட்ட செயற்பாடுகளில் விடுதலைப் புலிகள் தீவிரம்

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி அலைத் தாக்கத்தினால் அழிவடைந்துள்ள முல்லை நகரின் மீட்புப் பணிகளின் இரண்டாவது கட்டச் செயற்பாடுகள் துரித கதியில் நடைபெற்றுவருகின்றன.

மேற்படி அனர்த்தத்தினால் முல்லைத் தீவின் கரையோரங்கள் அனைத்தும் அழிவடைந்ததோடு வீடுகள், பொது இடங்கள், ஆலயங்கள் என அனைத்தும் இடிந்து வீழ்ந்துள்ளன. எனவே இவற்றை அகற்றும் செயற்பாடுகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன. இப்பணியில் தமிழீழ நிர்வாகசேவையினர்,மனிதநேயக் கண்ணி வெடியகற்றும் பிரிவினர், நிதித்துறையினர் ஆகியோரின் கனரக வாகனங்கள் செயற்

( IV ஆம் பக்கம் பார்க்க)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு புலிகள் பல வகையிலும் உதவியது பாராட்டத்தக்கது

### வடக்குக்கிழக்கு மாகாண ஆளுநர்

சுனாமி பேரலையால் மக்களுக்கு கடற்புலிகள் பலவகையிலும் உதவிகள் செய்தமையை நாங்கள் அறிவோம். தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மேற்கொண்ட பணிகளும் பாராட்டத்தக்கது என வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நேற்று வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுனாமி அலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவையாற்ற வேண்டியது எங்கள்

( IV ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் துறை செயலகம் நோக்கி வீசிய குண்டுடே தே.சே.வங்கியில் வீழ்ந்தது

### புலிகள் சந்தேகம் தெரிவிப்பு

(மன்னார்)

எமது அலுவலகத்தை இலக்குவைத்து வீசப்பட்ட குண்டே இலக்குத்தவறி தேசிய சேமிப்பு வங்கிக் கட்டடம் மீது வீழ்ந்துள்ளதாக மன்னார் அரசியல் துறையினர் சந்தேகம் தெரிவித்துள்ளனர். இச்சம்பவம் குறித்து மன்னார் அரசியல் துறைப்பொறுப்பாளர் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் மன்னார் பிரிவிற்கு முறைப்பாடு செய்துள்ளார்.அவர் செய்த முறைப்பாட்டில்

நேற்று முன்தினம் இரவு 9.20 மணியளவில் மன்னார் நகர் பிரதான வீதியில் உள்ள தேசிய சேமிப்பு வங்கிக் கட்டடம்

( IV ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச படைகள் வருகை குறித்து விமல்வீரவன்ச கருத்துக் கூற மறுப்பு

சிறிலங்காவிற்கும் சர்வதேச படைகள் வந்திருப்பது குறித்து இடது சாரிகளாகத் தம்மை வளர்த்துக் கொண்ட ஜே.வி.பி யினர் கருத்துக் கூற மறுத்து விட்டனர்.

ஜே.வி.பி யின் பிரச்சாரச் செயலர் விமல் விரவன்சவே சர்வதேச படைகள் சிறிலங்காவிற்கு வந்திருப்பது குறித்து கருத்தெதனையும் கூறமுடியாதெனக் கூறியுள்ளார்.

இடது சாரிகளாகத் தம்மை வளர்த்துக் கொண்ட ஜே.வி.பி யினர் தற்போது கட்சி அதிகாரத்தில் இருப்பதற்காகத் தமது இடது சாரிக் கொள்கைகளை மறந்து விட்டு முதலாளித்துவ அரசியலுக்கு ஆதரவுதெரி வித்து வரும் நிலையில் தமதுகொள்கைத் தடுமாற்றங்களை வெளிப்படுத்த முடியாதுள்ளதையே


( IV ஆம் பக்கம் பார்க்க)

## அகதி முகாம்கள் இராணுவத்தின் கட்டுப்பாட்டில்

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள அகதி முகாம்களில் இராணுவம் அல்லது விசேட அதிரடிப் படை நிவாரணப் பணிகளைக் கண்காணிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளது. அவர்களது அனுமதியின்றி வெளியார் எவரும் நிவாரண விநியோகத்தில் ஈடுபட முடியாதுள்ளது. முஸ்லிம் பிரதேசங்களிலுள்ள முகாம்களைப் பொறுத்தவரை வழமைபோல் பொலிசார் பாதுகாப்புக்கடமைகளில் மட்டும் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள். விசேட அதிரடிப்படையினரையோ அல்லது இராணுவத்தினரையோ அங்கு காணமுடியவில்லை. வழமைபோல் பள்ளிவாசல் நிர்வாகங்கள் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

## இராணுவம் யுத்த முனைப்பைக் கைவிட்டு மனிதாபிமான முறையில் செயற்பட வேண்டும்

### தமிழீழ கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை கோரிக்கை



(அலுவலக செய்தியாளர்)

சிறிலங்கா அரச படைகள் போர் முனைப்பில் இருந்து நீங்கி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏற்ற வகையில் மனிதாபிமான முறையில் செயற்பட வேண்டும். இவ்வாறு தமிழீழ கடற்படைச் சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் கடல் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அடுத்த கட்ட வேலைகள் பற்றி யாழ்ப்பாண கடற்றொழிலாளர் சங்க பிரதிநிதிகளை பளை புதுக்காட்டுச் சந்தியில் நேற்று நண்பகல் 12.00 மணியளவில் சந்தித்து பேச்சு நடத்திய பின்னர் அவர் வழங்கிய செவ்வியில் இதனைத் தெரிவித்தார்.

***இன்றைய சந்திப்பு பற்றி?***

கடற் கொந்தளிப்பு ஏற்பட்ட போது பாதுகாப்புக் கருதி கரையோர மக் கள் நீண்ட தூரம் பின்னோக்கிப் போயிருந்தார்கள். இப்போது அவர்கள் கடலில் இருந்து ஒரு கிலோ மீற்றர் தூரத்துக்குள் உள்ள தமது எஞ்சி இருக்கின்ற உடமைகளை பார்க்கக்கூடிய வகையில் அவர்களை நகர்த்தினோம். அடுத்த கட்டம் என்ன என்பதைத் தீர்மானிக்க நாங்கள் யாழ். மாவட்ட மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளை இங்கே அழைத்திருக்கிறோம். அவர்களுடன் பேசி சில தீர்மானங்களை எடுத்திருக்கின்றோம்.

இதேவேளை, கோவில் நிலங்கள், தனிப்பட்டவர்களின் காணிகள், பொதுவான இடங்கள் போன்றவற்றில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் ஒழுங்குபடுத்தலில் மாதிரிக் கிராமங்களை அமைப்பதற்கான

( IV ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

சண்டில் குளவீதி, கரவெட்டி மேற்கைச் சேர்ந்த சோதிலிங்கம் புஸ்பகுமார் ஆகிய எனது பேர்ஸ், தேசிய அடையாள அட்டையுடனும், இன்னும் சில ஆவணங்களுடனும் 5.1.2005ஆம் திகதி பரந்தனுக்கும், தாளையடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். தகவல் சொ.புஸ்பகுமார். (5531)

### தவறிவிட்டது

வட்டக்கச்சி சிவிச் சென்ரர் பகுதியில் வசிக்கும் ஜெ.மேரிதிரேசா ஜெயமணி அவரது அடையாள அட்டை இல.565553607v மற்றும் வீட மைப்பு அதிகார சபையால் வழங்கப்பட்ட சிவப்பு நிற அட்டையும், கரைச்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கிப் புத்தகமும், கிளிநொச்சி 155 ஆம் கட்டைக்கும், காவல் பணிமனைக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் காவற் பணிமனையில் ஒப்படைக்கும் வண்ணம் கேட்டுள்ளார். (5464)

# பல்வேறு இடங்களிலும் தொடரும் அவல நீக்க ஆற்றுப்படையரங்கு

(யாழ்பாணம்)

சுனாமி கடல் பேரனர்த்தத்தின் காரணமாக வாழ்விடங்களை விட்டு நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களுக்கான 'அவல நீக்க ஆற்றுப்படையரங்கு' ஆற்றுப்படுத்தலினை அரங்க செயற்பாட்டுக் குழுவினர் நடத்திவருகின்றனர். கடந்த திங்கட்கிழமை யா/புலோலி அமெரிக்க மெதடிஸ் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வில் மக்கள் பங்குபற்றி, "அனர்த்தம் ஏற்பட்ட பொழுது தமக்கு ஏற்பட்ட அனுபவங்களையும், அந்தக் கணத்தில் தாங்கள் பட்ட அவலங்களையும், தமது உறவுகளின் இழப்புக்களையும், தமது மன வேதனைகளையும் வெளிப்படுத்தினார்கள், தற்போது தமக்குள்ள பிரச்சினைகளையும், இழந்துபோன தமது வாழ்வை மீளக் கட்டியெழுப்புவதைப் பற்றியும் அவர்கள் கதைத்தார்கள். சிறுவர்களும் கூட அவர்களுக்கான பிரத்தியேக அரங்காடலில் ஈடுபட்டனர்." இத்தகைய தொடர்ச்சியான செயற்பாடுகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டுமென அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

இந்த நிகழ்வுகளில் அரங்க செயற்பாட்டுக் குழுவினருடன் இணைந்து வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாண கல்வியற் கல்லூரிகளில் கல்விகற்கும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாணவர்களும் பங்குபற்றி வருகின்றனர். யாழ். கல்வி வலய ஆசிரியர்களும் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை ஆசிரியர்களும் ஆற்றுப்படுத்தற்செயற்பாட்டில் ஈடுபட முன்வந்துள்ளார்கள்.

இச்செயற்பாடானது யாழ். மாவட்டத்தில் மட்டுமன்றி முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலும் நடைபெற்று வருகின்றன. அரங்கச் செயற்பாட்டுக்குழுவினருடன் இணைந்து கிளிநொச்சி மாவட்ட ஆசிரியர்களும், அரங்க செயற்பாட்டாளர்களும் மக்களின் அவலம் நீக்கும் அரங்க நிகழ்வுகளில் செயற்பட்டு வருகின்றனர். (36)

# காணவில்லை



திருமதி ஞானசேகரம் ஜெயமதி (வயது33) அவர் களை இயற்கை அனர்த் தத்தின் பின்பு கடந்த 26 ஆம் திகதி (26.12.2004) இருந்து காணவில்லை படத்தில் உள்ளவரை யாராவது கண்டால் பின்வரும் முகவரிக்கு தொடர்பு கொள் ளவும்.

**தொடர்பு:-**

*திரு. க. ஞானசேகரம் (கணவர்)*
*10ஆம் வட்டாரம்,*
*(சூசையப்பர் கோவில் முன்பாக)*
*புதுக்குடியிருப்பு,*
*முல்லைத்தீவு.*

*திரு. கு. பாபு (T.P. 0776513287)*
*கரணவாய் மேற்கு (வல்லியாவத்தை)*
*கரவெட்டி,*
*நெல்லியடி.*

*திருமதி அன்ரன் சாந்தி (T.P. 0242221891)*
*178/19 குட்செட் வீதி,*
*தோனிக்கல்,*
*வவுனியா.*

(5087)

# கண்ணீர் அஞ்சலி



## திரு.திருமதி மு.யோகரத்தினம்/யோ.நிர்மலாதேவி

*(பசீலன் வீதி, 3 ஆம் வட்டாரம், முள்ளியவளை.)*

26.12.2004 அன்று ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தால் காலமாகிய இவர்கள் இருவருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குவதோடு. ஆத்மாசாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

**பசீலன் வீதி,**
**3ஆம் வட்டாராம்,**
**முள்ளியவளை.** (5532)

**தகவல்,**
**தாய்,சகோதரர்கள் .**

# கடல் கொந்தளிப்பால் பல்வேறு நாடுகளிலும் 1.45 இலட்சம் பேர் இறந்துள்ளதாக அறிவிப்பு

(ஜகார்த்தா)

பல்வேறு நாடுகளிலும் சமீபத்தில் ஏற்பட்ட கடல்கொந்தளிப்பால் இறந்தவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 45 ஆயிரத்தை எட்டியுள்ளதாக அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட கடல் கொந்தளிப்பால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடு இந்தோனேசியா. இதுவரை 94 ஆயிரத்து 100 பேர் இறந்துள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது. ஒரு இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் காயமடைந்துள்ளனர். ஆயிரத்து 400 பேரைக் காணவில்லை. 3 இலட்சத்து 87 ஆயிரத்து 607 பேர் வீடுகளை இழந்து அகதிகளாகியுள்ளனர். படுகாயமடைந்த ஆயிரத்து 609 பேர் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இலங்கையில் 30 ஆயிரத்து 196 பேர் பலியாகியுள்ளனர். 16 ஆயிரத்து 665 பேர் காயமடைந்துள்ளனர்.

தாய்லாந்தில் ஐந்து ஆயிரத்து 187 பேர் சுனாமியால் கொல்லப்பட்டுள்ளனர். எட்டு ஆயிரத்து 457 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தியாவில் 15 ஆயிரத்து 160 பேர் பலியாகியுள்ளனர். மலேசியாவில் 74 பேரும், மாலைதீவில் 74 பேரும், மியான்மரில் 59 பேரும், வங்கதேசத்தில் இரண்டு பேரும், கிழக்கு ஆபிரிக்க நாடுகளான கென்யா, சோமாலியா, டான்சானியா, செசல்ஸ், மடகஸ்காரில் 137 பேரும் பலியாகியுள்ளனர்.

## University of Jaffna,Jaffna

### Improving Relevance and Quality of Undergraduate Education (IRQUE) Project

### Intensive Course in English

**The Students those who have applied to follow the above course are required to be present at the Kailasapathy Auditorium on 10-01-2005 at 10.00 am.**

**IRQUE project,**
**University of Jaffna,**
**Jaffna.**

**Deputy Director,**
**Administration.**

(சி.1105?)

## யாழ்.பல்கலைக்கழகம்

### உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறி-2004/2005

### அனுமதித்தேர்வு

*30.12.2004 இல் நடைபெறவிருந்த மேற்படி உடற்கல்வி டிப்ளோமா கற்கைநெறிக்கான அனுமதித் தேர்வு 20.01.2005 வியாழக்கிழமை நடைபெறும்*

*பரீட்சை நிலையம்:- இராமநாதன் மண்டபம்*
*யாழ். பல்கலைக்கழகம்,*
*திருநெல்வேலி.*

நேரம்:-மு.ப.10.00 - 12.00 மதியம்

*பரீட்சார்த்திகள் அனைவரும் ஏற்கனவே. அவர்களுக்கு அனுப்பப்பட்டிருந்த பரீடசை அனுமதி அட்டைகளைக்கொண்டு வருதல் வேண்டும்.*

*துணைவேந்தர்,*
*05.01.2005.*

*(சி.11063)*

*இயற்கை அனர்த்தத்தால் உயிர் இழந்தவர்கள்*
*உறவுகளை இழந்த அனைவருக்கும்*
*ஏசியன் கொம்பியூட்டர்ஸ் மற்றும் கணினியியற் கல்லூரி சார்பாக*
*எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்*

**சனவரி 9 ஆம் திகதி நடைபெறவிருந்த கணினி கற்கை நெறிகளுக்கான புலமைப்பரிசில் பரீட்சை பிற்போடப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு எமது பயிற்சி நிலையத்தை நாடவும்**

## கணினியியல் கல்லூரி

*யாழ்.சாலை, கிளிநொச்சி.*

*(சி.11180)*

## ஹரே கிருஷ்ணா

*சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை ஆதரிக்க கோகுலம் சிறுவர் இல்லம் முன்வந்துள்ளது.*

*சுனாமி அனர்த்தத்தின்ால் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற குழந்தைகளை கோகுலம் சிறுவர் இல்லம் ஏற்றுப் பராமரிக்க முன்வந்துள்ளது. இவ்விடயம் சம்பந்தமாக தொடர்புகொள்ள வேண்டிய முகவரி.*

**கோகுலம் சிறுவர் இல்லம்,**
**607 A நீர்கொழும்பு வீதி,**
**மாபொல ,வத்தளை**
T.P-2948398

**ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்,**
**188, புதுச்செட்டித்தெரு,**
**கொழும்பு-13,**
T.P-12433325

# எம் மீதான குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை;

# தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அறிவிப்பு!

**தெரிந்தே செய்யப்படும் பொய்யான பிரச்சாரங்களை தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வன்மையாக மறுத்துள்ளது. பல பத்திரிகைகள் இத்தகைய செயலில் ஈடுபட்டுள்ளதாகவும் அது கூறுகிறது.**

சர்வதேச உதவி ஸ்தாபனங்களையும், சர்வதேச ஊடகவியலாளர்களையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சுயேட்சையாக வடக்கு கிழக்கில் பணிபுரிய ஒத்துழைப்பு நல்குவதில்லையெனக் கூறியிருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட பகுதிகளில் சர்வதேச, உள்நாட்டு மருத்துவர்களையும் மேலும் நூற்றுக்கணக்கான புனரமைப்புப் பணியாளர்களையும் இங்கு பணிபுரிவதற்கு உண்மையில் உறுதுணையாகவே தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இருந்து வருகின்றது. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சிறிலங்கா அரசாங்கத்தின் பல்வேறு பிரிவுகளுடனும், சர்வதேச உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுடனும் வடக்குக் கிழக்கில் புனர்வாழ்வுக்கான வேலைகளில் ஈடுபட்டுள்ளது. நாங்கள் அவர்களை வரவேற்பதுடன், அவர்களுக்கான உதவிகளை உறுதிப்படுத்துவதிலும் உறுதியாக உள்ளோம் என்பதுதான் உண்மை. துன்பத்திற்கு உதவ முன்வருபவர்களாக எல்லோரும் தமிழர் புனர்வாழ்வுக் கழக கொழும்புக் கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள். நாங்கள் அவர்களுடன் ஒத்துழைப்பு நல்கி அவர்கள் தரும் நிவாரணங்கள் சரியான முறையில் போய்ச் சேர உதவிகள் செய்வோம். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் செயற்பாடுகள் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குள் மட்டும் அடங்கினாலும் அது ஒரு இன மக்களுக்காக மட்டும் செயற்படவில்லை. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சுனாமி பாதிப்பால் பாதிப்புற்ற பகுதிகளுக்காக நடாத்தும் 252 நலன்புரி நிலையங்களில் சிங்கள-முஸ்லிம் மக்கள் கணிசமாக தங்கியிருக்கின்றார்கள். இந்த பேரழிவிலிருந்து மக்களிடையே உண்டாகக்கூடிய நோய்கள் கரைதாண்டி விடுமானால் சுனாமியை விட பாரிய பேரழிவு ஒன்றை நாம் சந்திக்க வேண்டியும் வரலாம். எமக்கு இப்படியான ஒன்றைத் தடுக்க மேலும் பெரியளவில் உதவிகள் தேவைப்படுகின்றன. எமக்கு மிகப்பெரிய அளவில் உதவிகள் செய்த உள்நாட்டு, சர்வதேச மக்கள் ஸ்தாபனங்களுக்கும், மக்களுக்கும் நன்றி கூறும் நாம் இன்னும் மிகப்பெரிய தேவைகள் இருப்பதை உங்களுக்குக் கூறுகின்றோம்.

## அவுஸ்.சிறப்பு மருத்துவக் குழு அம்பாறைக்கு விஜயம்!

கடலடிப் புவி நடுக்க ஆழிப்பேரலையினால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்டத்தில் அல்லற்படுகின்ற மக்களுக்கு சேவையாற்ற வந்துதவுமாறு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் சர்வதேச கிளைகளுக்கு ஊடாக விடுத்த வேண்டுகோளை ஏற்று அவுஸ்திரேலியாவிலிருந்தும் சிறப்பு மருத்துவர் குழு தாயகத்திற்கு வருகை தந்துள்ளது.

5 வைத்தியர்கள் அடங்கிய இக்குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை அம்பாறை மாவட்டத்தில் தமது சேவைகளை ஆரம்பிப்பதற்காக சென்றடைந்துள்ளனர். அம்பாறை சென்றடைந்த சிறப்பு வைத்திய குழுவினரை, அம்பாறை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழக செயலகத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழக பிரதிநிதிகள் வரவேற்று கலந்துரையாடி மக்களினதும், மாவட்டத்தினதும் நிலைமைகளையும் விரிவாக விளக்கினர். மக்களின் தேவைகளைக் கேட்டறிந்து கொண்ட குழுவினர் உடனடியாகவே தமது பணிகளை ஆரம்பித்துள்ளனர். (சோ)

–புலிகளிடம் நிவாரணம் கையளிப்பு–

# இத்தாலி அரசின் செயலுக்கு சிறிலங்கா அரசு எதிர்ப்பு!

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் நேரடியாக நிவாரண உதவிகளை வழங்குவது என்ற இத்தாலிய அரசின் நடவடிகைக்கு சிறிலங்கா அரசு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

தனது எதிர்ப்பை இத்தாலி நாட்டுத் தூதுவர் சல்வற்றோர் சோற்றாவிடம் சிறிலங்கா தெரிவித்துள்ளது. சிறிலங்காவில் ஒரே ஒரு அரச நிர்வாகம்தான் இருப்பதாகவும், எந்தவொரு உதவி வழங்குவதாயினும் தங்கள் அரச நிர்வாகத்தின் ஊடாகவே அவ் உதவிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர்களது கண்டனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தாலியத் தூதுவர் கடந்த செவ்வாய் அன்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு நேரடியாகவே இப் பொருட்களை எடுத்துச் சென்று மனிதாபிமான அடிப்படையில் விடுதலைப் புலிகளிடம் கையளித்தனர். இதைத் தொடர்ந்தே இவ் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட திருமலை மக்களுக்கு த.ச. பொ.அபிவிருத்தி நிறுவனம் உதவி

தமிழர் சமூக பொருளாதார அபிவிருத்தி நிறுவனமானது இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு திருகோணமலை கோபாலபுரம் மகாவித்தியாலயத் தில் தங்கி உள்ள நிலாவெளி மக்களுக்கு கடந்த 03.01.2005 அன்று நேரடியாகச் சென்று உதவிப் பொருட்களை வழங்கிவருகியுள்ளது.

இதில் குழந்தைகளுக்குத் தேவையான பால்மா பவுடர், சத்துணவுகள், ஓடிக்கலோன் மற்றும் உடு புடவைகள், நுளம்பு வலை, அரிக்கன் லாம்புகள், பெற்றோல்மாக்ஸ், சோப் என்பன வழங்கப்பட்டன.

அத்துடன் இவர்களுக்கு சமையல்களுக்கான விறகு தூர இடங்களில் இருந்து கொண்டு வர வேண்டியுள்ளதனால் அதற்கு உரிய வாகனத்திற்கான எரிபொருளும் கொடுத்து உதவியது. கனேடிய தமிழ் வானொலியினரின் அனுசரணையுடன் கனடாவில்இருந்து வந்திருந்த இளைஞர்களும் நேரடியாகச் சென்று இவ் உதவி வழங்கும் நிகழ்வில் பங்குபற்றினர்.

# மாசடைந்த நீரை அருந்திய சிலர் கல்முனைப் பகுதியில் மரணம்

கல்முனைப் பகுதிகளில் மாசடைந்த நீரை அருந்தியதால் சிலர் இறந்திருப்பதாக பி.பி.சி தெரிவிக்கிறது.

கடந்த மாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற கடல் கொந்தளிப்புக் காரணமாகவே குடிநீர் அசுத்தமானதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தவிர இப் பகுதிகளில் அகதி முகாம்களில் இருக்கின்ற மக்களிடையே சின்னமுத்துப் போன்ற தொற்று நோய்கள் வர வாய்ப்புள்ளதாக சுகாதாரத்துறையினர் எச்சரித்துள்ளனர்.

# சுனாமி பேரலையால் வடமராட்சி கிழக்கிலிருந்து 12352 பேர் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலுள்ளனர்

## புதுக்காட்டுச்சந்தி செயலணிக்குழு புள்ளிவிபரம் தெரிவிப்பு

கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலை யங்களில் தங்கியுள்ள வடமராட்சி கிழக்கு மக்களின் இதுவரை கிடைத்த புள்ளி விபரங்களை புதுக்காட்டுச் சந்தி செயலணிக்குழு செயலகம் வெளியிட்டுள்ளது.

இதன்படி கடந்த 04-01-2005 அன்று செயலணிக் குழு அலுவலகத்தால் திரட்டப்பட்ட விபரங்களே இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளது. பளை மத்திய கல்லூரியில் 1880 குடும்பங்களைச் சேர்ந்த 6784 பேரும், புலோப்பளை றோ.க. வித்தியாலயத்தில் 239 குடும்பங்களைச் சேர்ந்த 1108 பேரும், தர்மக்கேணி அ.த.க. பாடசாலையில் 103 குடும்பங்களைச் சேர்ந்த 367 பேரும், சோரன்பற்று கணேசா வித்தியாலயத்தில் 320 குடும்பங்களைச் சேர்ந்த 1161 பேரும், மாசார் அ.த.க. பாடசாலையில் 144 குடும்பங்களைச் சேர்ந்த 619 பேரும், இயக்கச்சி அ.த.க. பாடசாலையில் 122 குடும்பங்களைச் சேர்ந்த 495 பேரும், கோவில் வயல் அ.த.க. பாடசாலையில் 54 குடும்பங்களைச் சேர்ந்த 209 பேரும், முகாவில் அ.த.க. பாடசாலையில் 70 குடும்பங்களைச் சேர்ந்த 240 பேரும், தருமபுரம் மகாவித்தியாலயத்தில் 49 குடும்பங்களைச் சேர்ந்த 181 பேரும், கிளி. கனிஷ்ட வித்தியாலயத்தில் 137 குடும்பங்களைச் சேர்ந்த 583 பேரும், கிளி. மத்திய கல்லூரியில் 39 குடும்பங்களைச் சேர்ந்த 151 பேரும், விசுவமடு மகாவித்தியாலயத்தில் 32 குடும்பங்களைச் சேர்ந்த 87 பேரும், பூநகரியில் 98 குடும்பங்களைச் சேர்ந்த 367 பேருமாக மொத்தம் 327 குடும்பங்களைச் சேர்ந்த 12352 பேர் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளனர் என புதுக்காட்டுச் சந்தி செயலணிக்குழு செயலகம் வெளியிட்ட புள்ளி விபரம் தெரிவிக்கிறது. (லோ. தீ)

# ஹெல உறுமய பொதுச் செயலாளர் பதவியிலிருந்து இராஜினாமா

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியில் இருந்து வண. உடுவே தம்மாலோக்க தேரர் பதவி விலகி உள்ளார்.

மிகவும் பிரபல்யமான இப் பிக்கு, தான் இனிவரும் காலங்களில் எந்தவொரு தேர்தலிலும் போட்டியிடுவதில்லை என்று முடிவெடுத்திருப்பதாகவும், எஞ்சியுள்ள தனது பதவிக்காலத்தில் ஒரு சுயேட்சை பாராளுமன்ற உறுப்பினராகவே பணியாற்றத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். சிறிலங்கா அரசியல் அமைப்பின் உண்மை நிலையை தான் நன்கு உணர்ந்ததாலும், அதனால் தனது மத சார்பான சேவைகளுக்கென ஒதுக்கப்பட்ட நேரம் மிகவும் குறைந்திருப்பதையும் இந்தப் பதவி விலகலுக்குக் காரணமாகக் குறிப்பிட்ட தேரர், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டோருக்கான நிவாரணப் பணிகளில் தன்னை ஓர் மதகுரு என்றும் பாராமல், ஒரு சாதாரண அரசியல்வாதியாகவே கருதினர் என்ற தனது மனவருத்தத்தினையும் தெரிவித்துள்ளார். இது திடீரென எடுக்கப்பட்ட ஒரு முடிவல்ல என்றும் குறிப்பிட்ட அவர், இது பற்றி தான் கடந்த சில காலங்களாகவே சிந்தித்து வந்ததாகவும் கூறியுள்ளார். ஜாதிக ஹெல உறுமய கட்சி, அரசியலை விட சிறிலங்கா தேசிய அரசியலையே கொள்கையாகக் கொண்டிருப்பினும், மதத்தினை மையமாக வைத்து தேசத்தின் அரசியலை முன்னெடுக்க முயல்வது மிகவும் ஒரு தரக்குறைவான செயலாகவே தான் கருதுவதாகவும் தெரிவித்துள்ளார். இவரது விலகலை அக் கட்சியின் தலைவரான வண. எல்லாவல மேதானந்த தேரரும் உறுதிப்படுத்தியுள்ளார்.

## வகுப்புக்கள் ஆரம்பம்

முல்லைத்தீவு பிரதேசநிலையத்தில் கல்விமாணி பட்டக் கற்கை நெறியைப் பயிலும் 1ஆம், 3ஆம் வருட ஆசிரிய மாணவர்களின் வகுப்புக்கள் எதிர்வரும் சனிக்கிழமை 8 ஆம் திகதியிலிருந்து மு/ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாசாலையில் ஆரம்பமாகவுள்ளது. எனவே இக் கற்கை நெறியிலும் மாணவர்கள் அனைவ யும் தவறாது சமூகமளிக்கும் வண்ணம்கல்விமாணி கற்கை நெறி சிரேஸ்டவிரிவுரையாளர் ச.நாகரத்தினம் வேண்டியுள்ளார். (சோ)

## மாகாண கூட்டுறவு ஆணையாளரின் பிரதிநிதி முல்லைக்கு விஜயம்

சுனாமி கடல் கொந்தளிப்புக் காரணமாக முல்லை மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளான பகுதிகளில் கூட்டுறவுத் திணைக்களம் மேற்பார்வை செய்யும் நிறுவனங்கள் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளும் பொருட்டு வடக்குக் கிழக்கு மாகாணக் கூட்டுறவு ஆணையாளர் பணிமனையில் இருந்து கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் பிரதிநிதி ஒருவர் குறித்த பகுதிகளை நேரில் சென்று பார்வையிட்டு அழிவுகள், சேதவிபரங்கள் பற்றி விபரங்களைத் திரட்டிச் சென்றுள்ளார். குறிப்பாக முல்லை மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், , முல்லை மாவட்ட கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அதன் கிளைச் சங்கங்கள், கரைதுறைபற்று பல.நோ.கூ.சங்கம், முல்லை கிழக்கு பனை.தென்னை.வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், முல்லை மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம், முல்லை வடக்கு பனை.தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், வலஞன் மடம், முல்லை.தெற்கு பனை. தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், முல்லை மாவட்ட பனை.தென்னை வள அபிவிருத்திச் சங்க கூட்டுறவுச் சங்கங்களின் இணையம் உள்ளிட்ட குறிப்பிட்ட பணிமனைகள் இருந்த இடங்களைப் பர்வையிட முல்லை மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் மோ.சிவயோகம், முல்லை மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி ஆகியோர் உள்ளிட்ட குழுவினர் வடக்கு கிழக்கில் இருந்து வருகை தந்த பிரதிநிதிகளுடன் சென்று பார்வையிட்டுள்ளனர். (08)

# ஆதரவற்றிருந்த எமக்கு த.பு.கழகம் உடன் வந்து உதவியது

## –கோமாரி கிராம மக்கள் தெரிவிப்பு

அம்பாறை பொத்துவில் பிரதேசத்தில் கடற்பூகம்பத்தினால் அழிவுற்ற போது எவருமே எம்மை திரும்பிப் பாராதிருந்த நேரத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மட்டும் எமக்கு உடன் வந்து உதவியது என கோமரி கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

நாம் எல்லாவற்றையும் இழந்து ஓடிவந்தோம். எமக்கு உதவ எவருமே முன்வராததாலே இர்ண்டு நாட்காளாக கஷ்டப்பட்டோம். பின்பு தமிழர் புனர்வாழ்வுக கழகம் உணவு,உடை என்பவற்றைத் தந்தது. தமிழர் புனர்வாழ்வுக்கழகம் தான் இதுவரையும் எமக்கு உதவி செய்துவருகிறது எனக் கூறினார்.

தாண்டியடியில் தற்காலிக கூடாரங்களை அமைத்துக் கொண்டிருந்த மக்களிடம் உங்களுக்கு யார் இந்தக் கூரை விரிப்புகளை தந்தார்கள் என்று கேட்டதற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தந்ததாகவும் தாம் காடுகளை வெட்டி குடியமர்த் துவதற்கான வேலைகளைச் செய்துகொண்டிருக்கின்றோம். என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். (சோ)

# திருமலை அகதி முகாம்கள் நிர்வகிப்பில் விடுதலைப்புலிகள்-படையினர் இணக்கம்

(திருகோணமலை)

திருகோணமலையில் அகதி முகாம்களை நிர்வகிப்பதில் இராணுவத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் ஏற்பட்டிருந்த முறுகல் தீர்க்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தொடர்ந்தும் குறிப்பிட்ட முகாம்களை நிர்வகிக்கும் பாதுகாப்புத் தரப்பு பிரதிநிதி ஒருவரும் முகாம் நிர்வாகத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார். இந்த முடிவு நேற்று திருகோணமலை போர் நிறுத்தக்கண் காணிப்பு அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்டது

இந்த இணக்கம் ஏற்பட்டபோதிலும் சாம்பல் தீவிலும் ,சல்லியிலும்,படைத்தரப்பு முகாம்களை பொறுப்பேற்று நடத்துவதாக தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் எழிலன் தெரிவித்தார். இதேவேளை திருகோணமலையின் தற்போதைய நிலை குறித்து இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரட்நாயக்க கருத்துரைக்கையில்; தமிழர் புனர்வாழ்வு அமைப்புகளும் பொது அமைப்புகளும் மற்றும் படைத்தரப்பும் இணைந்து முகாம்களை செயற்படுத்த இன்றைய கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இது நல்ல தீர்வாகும் தற்போதைய சந்தர்ப்பத்தில் பழைய பிரச்சினைகளை மறந்து செயற்படுவதே சிறந்த நடவடிக்கையாகும் எனத் தெரிவித்தார்.

## சர்வதேச...

அவரது இந்தப் பதில் தெளிவுபடுத்துவதாக வுள்ளது. என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

முதலாளித்துவ நிலைப்பாட்டிற்குத் தொடர்ந்தும் எதிர்ப்பு வெளியிட்டு வரும் இடதுசாரித் தலைவர் வாசுதேவ நாணயக்கார சர்வதேச படைகள் நாட்டில் நிலைகொள்வது என்பது நாட்டின் இறைமையைப் பாதிக்கும் ஒரு விடயம். அமெரிக்காவின் பென்ரகனில் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட விடயங்களே நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இயற்கை அனர்த்தம் ஏற்படாது விட்டாலும் வேறுவித காரணங்களை முன்வைத்தாவது அமெரிக்கப்படைகள் இலங்கையில் காலூன்றும் நடவடிக்கையினை மேற்கொண்டிருக்கும். என அவர் தெரிவித்தார். சர்வதேச இராணுவ வருகை குறித்துக் கருத்து வெளியிட்டுள்ள முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப்ஹக்கீம் இது சர்வதேச வல்லரசுக்கும், பிராந்திய வல்லரசுக்கும் இடையில் பிரச்சினையை உருவாக்கி இலங்கையில் மீண்டும் யுத்த சூழ்நிலையை ஏற்படுத்தும் எனத் தெரிவித்தார்.

அத்துடன் திருகோணமலை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து சில வேலைத் திட்டங்களை மேற்கொள்ள இணக்கமும் காணப்பட்டது.

# திருமலை அகதி முகாம்களில் ஆயுதங்களுடன் படையினர்

### அச்சத்தினால் மக்கள் வெளியேற்றம்

படையினர் தொடர்ந்தும் அகதி முகாம்களில் ஆயுதங்களுடன் தங்கியிருப்பதால் அங்குள்ள மக்கள் பெருமளவில் வெளியேறிவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

உவர் மலை, சல்லி, சாம்பல்தீவு. போன்ற இடங்களிலுள்ள அகதிமுகாம்களிலிருந்து அகதிகள் வெளியேறிவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. படையினரின் கட்டுப்பாட்டின் கீழ் தம்மால் இருக்க முடியாது எனத் தெரிவித்தே இந்த மக்கள் வெளியேறி வருகின்றனர்.

## அரசியல்....

மீது இனந்தெரியாத நபர்கள் இருவர் உந்துருளியில் வந்து கிரனேட்டை வீசி விட்டுத் தப்பிச்சென்றுள்ளார்கள். சம்பவம் நடைபெறுவதற்கு அரைமணித்தியாலயத்திற்கு முன்பாக மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது.

இவ்வலுவலகத்திற்கு அருகில் எமது அரசியல் பணிமனைக்குரிய அலுவலகம் கடந்த மூன்று வருடங்களாக உள்ளது. இவ்வலுவலகத்திற்கு இலக்கு வைத்து வீசப்பட்ட கிரனேற் இலக்குத்தவறி தேசிய சேமிப்பு வங்கி மீது வீழ்ந்து வெடித்துள்ளது. என நாம் கருதுகின்றோம். இச்சம்பவத்தில் எவரிற்கும் எவ்வித உயிரிழப்பும் ஏற்படவில்லை வங்கியின் முன்பக்கம் சேதமடைந்துள்ளது. எனவே இச்சம்பவம் திட்டமிட்ட ரீதியில் நடத்தப்படுவதாகவே கருதுகின்றோம். மின்சாரம் அரைமணித்தியால நேரம் துண்டிக்கப்பட்டிருந்தும். கிரனேற் வீசப்பட்டு 3 நிமிடங்களின் பின் மீண்டும் மின்சாரம் சீராக்கப்பட்டு வழமை ஒழுங்கிற்கு வந்துள்ளாதால் மேலும் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

எனவே இன்றைய சூழலில் போரின் சுமை ஒரு புறம் இருக்க கடல்கொந்தளிப்பில் உறவுகளை இழந்து உடைமைகளை இழந்து தவிர்த்துக்கொண்டிருக்கும் எம்மக்கள் மீது மத்தியில் இவ்வாறான அநாகரிகமான செயற்பாடுகளைச் செய்வோர் மீது எமது வண்மையான கண்டனங்களைத் தெரிவிப்பதுடன் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவோர்களுக்கு இங்கு பாதுகாப்புக் கடமையில் உள்ள சிறிலங்கா அரச பாதுகாப்பு படையினரும், பொலிசாருமே பதில் கூற வேண்டும். எனவே இவ்வாறான சம்பவங்கள் எதிர்காலத்தில் ஏற்படாதிருக்க சம்பந்தப்பட்ட படைத்தரப்பினர் உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே இன்றைய சூழலில் போரின் சுமை ஒருபுறம் இருக்க கடல் கொந்தளிப்பில் உறவுகளை இழந்து உடைமைகளை இழந்து தவித்துக்கொண்டிருக்கும் எம்மக்கள் மத்தியில் அவ்வாறான அநாகரிகமான செயற்பாடுகளை செய்வோர் மீது எமது வன்மையான கண்டனங்களை தெரிவிப்பதுடன் இவ்வாறானச் செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு இங்கு பாதுகாப்புக்கடமையில் உள்ள சிறிலங்கா அரச பாதுகாப்புப் படையினரும் பொலிசாருமே பதில் கூற வேண்டும்.

## சுனாமியால்...

அனைவரதும் பாரிய பொறுப்பாகும்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு உதவிகள் வழங்க வேண்டிய அவசியம் உள்ளது. அது பற்றி அரசு சிந்தித்து வருகின்றது என்றார் அவர்.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிசோர் பேசும்போது;

நிவாரண விடயத்தில் இராணுவத்தினருடைய தலையீடுகள் உள்ளது. வடக்குக் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் இத்தகைய தலையீடுகள் இருக்குமானால் நிவாரணப் பணிகளைச் செய்ய முடியாது.

இதனை நாங்கள் சனாதிபதியினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளோம்.

ஆழிப்பேரலை காரணமாக பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி யாழ்ப்பாண மாவட்ட தற்போதைய நிலவரம் குறித்து வவுனியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் ஆராயப்பட்டது.

இந்த மாவட்டங்களுடைய அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள், படை உயர் அதிகாரிகள், வன்னி மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழக பிரதிநிதிகள், சிரேஸ்ட உயர் அதிகாரிகள், சனாதிபதி செயலக ஊடக பேச்சாளர் ஹரீம் பீரிஸ், சனாதிபதி செயலக சிரேஸ்ட அதிகாரி எஸ். சிவதாசன் உட்பட பலர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் இரண்டு நிமிட மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர்கள் தற்போதைய நிலைமை குறித்து விளக்கமளித்தார்கள். தேவைப்படும் விடயங்கள் குறித்தும் வலியுறுத்தினார்கள்.

## முல்லைநகர...

பாடுகளில் ஈடுபட்டுள்ளன.

இவ்வாறு இடிபாட்டுப் பகுதிகள் அப்புறப்படுத்தப்பட்டு நகரை அண்டி நீர்தேங்கி நிற்கும் பாரிய குழிகளை மூடும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனிடையே முல்லை கடற்கரையிலிருந்து 400 மீற்றருக்கு அப்பாற்பட்ட பகுதியிலேயே புதிய நகரமைப்புச் செயற்பாடுகள் நடைபெறவிருப்பதனால் குறிப்பிடப்பட்ட பகுதிகளில் உள்ள நீர்த்தேக்கங்களை நிரவும் பணியிலும் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். (ச)

## இராணுவம்....

திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கான விபரங்கள் தேவை. அந்த விபரங்களை இன்று இவர்கள் மூலம் பெற்றுக் கொண்டிருக்கின்றோம்.

அவர்களிடம் விபரங்களைப் பெற்றுக் கொண்டோம். புனர்வாழ்வுக் கழகத்தின் மாதிரிக் கிராம அமைப்புப்பற்றி அவர்களுக்குத் தெளிவுபடுத்திக் கலந்தாலோசித்து அது பற்றிய முடிவை எடுத்தோம்.

**□'சுனாமி' பாதிப்புக்குள்ளான யாழ்குடா கரையோரப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினர் புதிய காப்பரண் களையும் முகாம்களையும் அமைத்து மக்களைக் கெடுபிடிக் குள்ளாக்குவதாகக் கூறப் படுகிறது. இது பற்றி நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

சிறிலங்கா இராணுவம் மனிதாபிமான முறையில் செயற்பட வேண்டும். இவர்கள் இந்த மக்களுக்கு முன்னால் குந்தி இருந்து கடலில் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள். இந்த நிலையில் கடல் பெருக்கால் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. இதனைச் சாட்டாக வைத்து மீட்பு நடவடிக்கைக்கு என்று கூறிப் பலர் வந்திருக்கின்றார்கள்.

இந்த நிலையில் சிறிலங்காப் படைகள் யுத்தத்துக்கான முனைப்பைக் கைவிட வேண்டும். அத்துடன் பாதிக்கப்பட்ட மக்கள் தமது வாழ்விடங்களில் மீளவும் குடியமர முதல் இராணுவம் வந்து எஞ்சி இருக்கின்ற இடங்களையும் பிடிக்கும் நடவடிக்கையையும் கைவிட வேண்டும். இது பற்றிய தங்களின் நிலைப்பாடுகளைத்தான் இன்றைய சந்திப்பில் மக்கள் எமக்குத் தெரியப்படுத்தினார்கள்.

இந்த அரசும், அரசைத் சார்ந்திருக்கின்ற படைகளும் மக்களின் வாழ்விடங்களை விலத்தி இருக்கவேண்டும். யாழ். குடாநாடு கடலால் சூழப்பட்டிருக்கிறது. இந்தக் கடலால் சூழப்பட்ட பகுதிகளில் தான் படையினர் அதி உச்ச பாதுகாப்புப் பகுதிகளைப் போட்டு மக்களுக்கு நெருக்குதல்களை போட்டதன் காரணத்தால்தான் இங்கு அதிக விளைவுகள் ஏற்பட்டன.

கடந்த இரண்டு வருடங்களாக கடல் பொங்கினால் பெரும் விளைவு ஏற்படும் என இந்த மக்கள் பல தடவை அவர்களுக்கு எடுத்துக் கூறியும் அதை அவர்கள் பொருட்படுத்தவில்லை. அதனால் அவர்களுக்கும் பாரிய விளைவுகள் ஏற்பட்டன.

யாழ். குடாவில் பாரிய பாதிப்புக்கள் ஏற்படுவதற்கு இராணுவ முட்கம்பிகளும் காரணமாக அமைந்தது. அரச படைகள் மக்களின் வாழ்விடங்களைக் கையளித்து தாங்கள் ஒதுங்கியிருக்க வேண்டும். முல்லைத்தீவில் எங்கள் பிரதான கடற்படைத்தளங்கள் அமைந்திருந்த இடங்களை எல்லாம் எங்கள் தேசியத்தலைவரின் கருத்துக்கமைவாக விலக்கி மக்களின் குடியிருப்புக்காக வழங்கியிருக்கிறோம். நாங்கள் சண்டைக்கான முன்னெடுப்பைச் செய்துகொண்டிருந்தால் எங்களின் இந்தப் பிரதான படைத்தளங்களை அகற்றி இருக்க மாட்டோம். இந்த முடிவை நேற்று முன்தினம் அரச அதிகாரிகள் முன்னிலையில் அறிவித்தோம். இதன்படி உன்னாப்புலவு, கரைச்சிக்குடியிருப்பு,வட்டுவாகல் ஆகிய இடங்களில் உள்ள முகாம்களையே நாங்கள் அகற்றி இருக்கிறோம். பரந்து விரிந்த யாழ்ப்பாணத்தில் மக்களின் தேவைகளுக்கு ஏற்ப இடங்களை விட்டுக்கொடுத்தால் என்ன? இது மனிதாபிமானப்பிரச்சினை.

**□ பாதிக்கப்பட்ட மக்களுக்கான அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?**

பாதிக்கப்பட்ட மக்களின் கல்விபற்றி ஆராய்ந்தோம். மாலை நேரக்கல்வியை வழங்கத் தீர்மானித்திருக்கிறோம். இதற்கான ஒழுங்குபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அடுத்து 'சுனாமி 'போன்ற பாரிய தாக்கங்கள் ஏற்பட்டால் அதில் இருந்து எப்படிப் பாதுகாப்பது என்பது பற்றி ஆராயப் புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து எங்கள் உறவுகளின் திட்டமிடல் குழு வருகிறது. இதன்படி யாழ். மாவட்டத்தில் வடமராட்சி கிழக்கில் ஒரு திட்டமிடல் குழுவும், பருத்தித்துறையில் ஒரு திட்டமிடல் குழுவும், அந்தக் கிராம மக்களும் சேர்ந்து கடல் அலை பாதுகாப்பு அரண்கள், குடியிருப்புக்கள் என்பன அமைப்பது பற்றிய திட்டங்களை வகுப்பார்கள். இதனை வெளிநாட்டு நிதி உதவியுடன் மேற்கொள்வோம்.

**□ இந்த செயற்பாட்டை இராணுவம் அனுமதிக்கும் என நீங்கள் கருதுகிறீர்களா?**

உண்மையில் எங்கள் மக்களின் பிரச்சினையை நாங்கள்தான் பார்க்கவேண்டும். இன்று நாங்கள் எங்கள் படைத்தளபதிகளை முற்றுமுழுதாகப் பயன்படுத்தியுள்ளோம். இது அரசுக்கும், அதன் படைகளுக்கும் தெரியும். இதனைப் பார்த்துத்தான் சந்திரிகா அனைத்து நடவடிக்கைகளையும் இராணுவத் தளபதிகளுக்கு கீழ் கொண்டுவர வேண்டும் என அறிவித்திருக்கிறார். சில விடயங்களை எங்களைப் பார்த்து கொப்பி செய்வதை விட உருப்படியான நடவடிக்கைகளை எடுத்தால் பிரயோசனமாகவிருக்கும் என்றார்.

நேற்று நண்பகல் 12.00 மணிக்கு புதுக்காட்டுச் சந்தியில் நடைபெற்ற இச் சந்திப்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில் கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை, துணைத்தளபதி செழியன், அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன், கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் றேகா, யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, கிளி.அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்கள் சார்பில் யாழ்.மாவட்டகடற்றொழிலாளர் சம்மேளனத் தலைவர், செயலாளர், சங்கத் தலைவர்கள், உறுப்பினர்கள் என 75 இற்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர். (லோ,தீ)

## ஐ.நா...

உலக சுகாதார ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் ஜோன் ஹுக் 2 நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இன்று கொழும்பு வருகின்றார். இவரும் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிடுவதோடு சுகாதார மற்றும் வைத்திய நிலவரம் குறித்து நேரில் சென்று பார்வையிடுவார். அதேநேரம் உலகவங்கித் தலைவர் ஜேம்ஸ் டி வுல்ப் நாளை கொழும்பு வருகிறார். 3 நாட்கள் கொழும்பில் தங்கியிருக்கும் இவர் கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கும் விஜயம் செய்வார். இதற்கிடையில் அமெரிக்க காங்கிரசின் செனற் சபை உறுப்பினர்களான பில் ஸ்ரீல் மற்றும் மேரி லுன்ரே ஆகியோர் அமெரிக்க சனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய நேற்று மாலை கொழும்பு வந்துள்ளார்கள். இவர்களும் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிடுவார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்திய அதிகாரி ஒருவரின் தலைமையில் ஐக்கிய நாடுகள் சபையின் அனர்த்த முகாமைத்துவக் குழுவினர் மாவட்ட செயலகத்தில் தமது பணிகளை ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## புலிகள்...

பணிகளை மேற்கொள்வதற்குப் பொறுப்பாகப் பல குழுக்களையும் விடுதலைப் புலிகள் உருவாக்கியிருந்தனர்.

இது மட்டுமன்றி பேரலை ஓயும் முன்னரே, கடற்புலிகளின் படகுகள் மீட்புப் பணிகளில் ஈடுபட்டதை ஆச்சரியத்துடன் குறிப்பிட்ட அவர் அதேவேளை சிறிலங்கா அரசின் பரிதாப நிலையையும் மிகவும் துல்லியமாக விபரிக்கத் தவறவில்லை.

மீட்புப் பணிகள் ஆரம்பிக்க முன்னரே, இப் பணிகளை யார் முன்னின்று செயற்படுத்துவது என்பதில் சிறிலங்கா அரசியல்வாதிகளுக்கு இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டது மட்டுமன்றி, மீட்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட சில மணித்தியாலங்களிலேயே ஊழல் குற்றச்சாட்டுகளும், நிவாரணப் பொருட்களுடன் வந்த வாகனங்கள் கடத்தப்பட்ட சம்பவங்களும் செய்திகளாக வெளிவரத் தொடங்கியிருந்தன எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேபோன்று, இலங்கையில் இருந்து வெளிவரும் டெய்லி மிரர் பத்திரிகையும் விடுதலைப் புலிகளினதும், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினதும் நிர்வாகத் திறமையினைப் பாராட்டியும் சிறிலங்கா அரசின் நிவாரணப்பணிகள் மிகவும் கட்டுக்கோப்பற்ற முறையில் கையாளப்பட்டு வருவதாகக் கண்டனம் தெரிவித்தும் கடந்த 5ஆம் திகதி தனது ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005ஆம் ஆண்டு சனவரி மாதம் 07ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.